ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2102/22 - 2018 දෙසැම්බර් මස 18 වැනි අඟහරුවාදා - 2018.12.18

*2102/22 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### வடமத்திய மாகாண மாகாண சபை

அறிவித்தல்

***1998 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சட்டக்கோவையின் II ஆவது பகுதி II (எ) பிரிவின் கீழான அறிவித்தல்***

*1998 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சட்டக்கோவையின் கீழ் வடமத்திய மாகாண கௌரவ ஆளுநர் எம். பீ. ஜயசிங்க ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், குறித்த சட்டக்கோவை II ஆவது பகுதியில் II (எ) சரத்திற்கமைய, வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி பாதுகாப்பு எல்லையில் காட்சிப்படுத்தப்படுகின்ற பெயர்ப்பலகை மற்றும் விளம்பரப் பலகைகளின் அறவீடு கீழே குறிப்பிடப்பட்டவாறு அறவிடல் மேற்கொள்ளப்படுகின்றதென இத்தால் அறிவிக்கின்றேன்.*

**பெயர்ப்பலகை மற்றும் விளம்பரப் பலகை :**

| பெயர்ப்பலகை அல்லது விளம்பரப் பலகை வகை | பெயர்ப்பலகை அல்லது விளம்பரப் பலகைகளின் அளவீடு | வருடாந்தக் கட்டணம் (ரூ.) | சேவைக்கட்டணம் (ரூ.) | மீண்டும் செலுத்தும் வைப்புப் பணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| அதிவிசாலம் | 50 சதுர மீற்றருக்கு மேல் | 3,000.00 சதுர மீற்றர்/ வருடத்திற்கு | 10,000.00 பிரிவொன்றிற்கு | 30,000.00 பிரிவொன்றிற்கு |
| விசாலம் | 50 சதுர மீற்றருக்கு அல்லது 50 சதுர மீற்றருக்கு குறைவு அல்லது 30 சதுர மீற்றருக்கு மேல் | 3,000.00 சதுர மீற்றர்/ வருடத்திற்கு | 6,500.00 பிரிவொன்றிற்கு | 12,000.00 பிரிவொன்றிற்கு |
| மத்திமம் | 30 சதுர மீற்றருக்கு அல்லது 30 சதுர மீற்றருக்குக் குறைவு மற்றும் 15 சதுர மீற்றருக்கு மேல் | 3,000.00 சதுர மீற்றர்/ வருடத்திற்கு | 5,000.00 பிரிவொன்றிற்கு | 12,500.00 பிரிவொன்றிற்கு |

| பெயர்ப்பலகை அல்லது விளம்பரப் பலகை வகை | பெயர்ப்பலகை அல்லது விளம்பரப் பலகைகளின் அளவீடு | வருடாந்தக் கட்டணம் (ரூ.) | சேவைக்கட்டணம் (ரூ.) | மீண்டும் செலுத்தும் வைப்புப் பணம் (ரூ.) |
|---|---|---|---|---|
| சிறிய | 15 சதுர மீற்றருக்கு அல்லது 15 சதுர மீற்றருக்குக் குறைவு அல்லது 05 சதுர மீற்றருக்கு மேல் | 3,000.00 சதுர மீற்றர்/ வருடத்திற்கு | 4,000.00 பிரிவொன்றிற்கு | 6,500.00 பிரிவொன்றிற்கு |
| மிகவும் சிறிய | 05 சதுர மீற்றருக்கு அல்லது 05 சதுர மீற்றருக்கு குறைவு அல்லது 01 சதுர மீற்றருக்கு மேல் | 3,000.00 சதுர மீற்றர்/ வருடத்திற்கு | 2,000.00 பிரிவொன்றிற்கு | 3,250.00 பிரிவொன்றிற்கு |
| | 01 சதுர மீற்றர் அல்லது 01 இற்கு மேல் | 5,000.00 | 1,000.00 | |

கொடி **(Banners, Cut-Outs and Flags)**

| கால எல்லை | அளவீடு | கட்டணம் (ரூ) | மீண்டும் செலுத்தும் வைப்புப் பணம் (ரூ.) |
|---|---|---|---|
| ஒரு கிழமை அல்லது 01 கிழமைக்குக் குறைவு | 02 சதுர மீற்றர் அல்லது 02 சதுர மீற்றருக்குக் குறைவு | 200.00 | 100.00 |

குறிப்பு :

* இதற்காக அரசாங்கம் மூலம் அறவிடப்படும் வரிப்பணம் செலுத்துவதற்கு இணங்கப்பட்டது.
* வர்த்தக நோக்கோடு காட்சிப்படுத்தப்படாத பலகைக்காக வருடாந்தக் கட்டணம் பொது முகாமையாளரின் அனுமதியுடன் அறவிடப்படாமல் இருக்க முடியும்.

எம். பீ. ஜயசிங்க,
ஆளுநர்,
வடமத்திய மாகாணம்.

2018, நவெம்பர் 21.

01-38/1

---

## வடமத்திய மாகாண மாகாண சபை

### 1998 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சட்டக்கோவையின் II ஆவது பகுதி 10 (2) பிரிவின் கீழான அறிவித்தல்

1998 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சட்டக்கோவையின் கீழ் வடமத்திய மாகாண கௌரவ விடயப் பொறுப்பு அமைச்சர் மற்றும் ஆளுநர் எம். பீ. ஜயசிங்க ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், குறித்த சட்டக்கோவை II ஆவது பகுதியில் 10 (2) ஆம் துணைவிதிக்கமைய, வடமத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் "சீ" மற்றும் "டீ" தரத்திற்குட்பட்ட வீதி பாதுகாப்பு எல்லை மற்றும் கட்டட நிர்மாணிப்பு எல்லை கீழே குறிப்பிடப்பட்டவாறு கவனத்தில் கொள்ளப்படும் என இத்தால் அறிவிக்கின்றேன். இந்த அறிவிப்பு 2018.01.01 ஆந் திகதியிலிருந்து அமுலாக்கப்படும்.

***வடமத்திய மாகாண மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் "சீ" மற்றும் "ஏ" தரத்திற்குட்பட்ட வீதிகளின் பாதுகாப்பு, வீதியின் மத்திய ரேகையிலிருந்து இரு பக்கத்திலும் 10 மீற்றரும், கட்டட நிர்மாணிப்பு எல்லை மத்திய ரேகையிலிருந்து 15 மீற்றரும் குறிக்கப்படும்.***

எம். பீ. ஜயசிங்க,
ஆளுநர்,
வடமத்திய மாகாணம்.

*01-38/2*